முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

**அசல் வழக்கு எண்.243/2015**

The Oaths Act 1969(Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 26.09.2024 நாளாகிய இன்று முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி திருமதி.S.Suganiya Sri, B.A.B.L.,(Hons),M.L.,PGDAML. அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 26.09.2024 | சாட்சி | பி.வா.சா.1 |
| பெயர் | வீரமுத்து | வயது.. | 70 |
| தந்தை பெயர்.. | சேப்பெருமாள் | கிராமம்.. | பெரியமேடு |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு 4-ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை..**

1. வழக்கு சொத்து 1 வது ஐட்டத்தில் 0.10 1/3 செண்ட். 4 வது ஐட்டத்தில் மேல்புரம் 0.15 செண்ட் மற்றும் 6 வது ஐட்டத்தில் வடபுரம் 0.38 செண்ட், புல எண்.102/7 யில் 0.10 1/4 செண்ட் ஆகியவற்றை 4ம் பிரதிவாதி பாலகிருஷ்ணன் மற்றும் ஜெயலட்சுமி ஆகியோரிடம் இருந்து 02.08.1978 யில் கிரயம் வாங்கினார் என்றால் சரிதான். 1978 யில் இருந்து நான்காம் பிரதிவாதி தான் அந்த சொத்தை அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். கிரயம் வாங்கிய சொத்தில் 1,4 ஐட்டம் மற்றும் வழக்கில் கட்டுபடாத 0.15 செண்ட் ஆகியவற்றை பொறுத்து எனக்கும் 4ம் பிரதிவாதிக்கும் 14.08.1979 யில் ஒரு பரிவர்த்தனை பத்திரம் ஏற்பட்டது என்றால் சரிதான். அதன்படி 1,4 ஐட்ட சொத்துக்களை நான் தான் அனுபவித்து வருகிறேன் என்றால் சரிதான். 45 வருடங்களாக அந்த சொத்து என்னிடம் தான் உள்ளது என்றால் சரிதான்.

2. 5 வது ஐட்ட சொத்தை பாலகிருஷ்ணனிடம் இருந்து 19.03.1976 யில் கிரயம் வாங்கினேன் என்றால் சரிதான், அது 48 வருடங்களாக அந்த சொத்து என்னிடம் தான் உள்ளது.அந்த சொத்துக்களுக்கு பட்டா, சிட்டா மாற்றம் செய்யப்பட்டு நான் தான் அனுபவித்து வருகிறேன். கோவிந்தசாமி மனைவி ஜெயதாம்பாளுக்கு தாவா சொத்தில் எந்தவிதமான உரிமையும் இல்லை என்றால் சரிதான்.

**6,9 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-S.SuganiyaSri
Principal District Munsif,
Chidambaram.